IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.No. 95/2024 - PW-7

| | |
|---|---|
| Name | Dr.குமார் |
| Husband/Father Name | வைத்திலிங்கம் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | அரசு மருத்துவர் ஓய்வு |
| Age | 66 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.08.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரசு மருத்துவராக பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 15.02.2010 அன்று மாலை 6 மணிக்கு நான் புற நோயாளிகள் பகுதியில் சிகிச்சையில் இருந்த போது லோகையன் என்பவர் லலிதா என்ற 65 வயதுள்ள பெண்ணை சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அந்த பெண் அளித்த புகாரில் தான் வீட்டிலிருந்த போது அடையாளம் தெரியாத 3 ஆண் நபர்கள் 15.02.2010 மதியம் 02.10 மணியளவில் இரும்பு தடியால் தாக்கியதாக புகார் அளித்தார்.

அவருக்கு **காயம் 1**:- இடது கை சுண்டுவிரலில் 2x1x0.5cm அளவுள்ள ஒரு வெட்டு காயம் இருந்தது.

**காயம் 2**:- வலது கையில் நடுவிரலிலும், மோதிர விரலிலும் 2x1cm அளவுள்ள ரத்த கட்டு இருந்தது.

**காயம் 3**:- அவருக்கு தலையில் தலை வலி இருந்ததாக கூறினார்.

அந்த காயம் சாதாரண காயம் என்று நான் சான்று அளித்தேன். என்னால் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.08.01 17:10:42 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.